DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 44/2024 |
| P.W. | : 3 |
| Name | : திரு. பாஸ்கரன் |
| Father Name | : திரு. நடராஜன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் புளியம்பட்டி வெங்கநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 15-11-2020 அன்று காலை 5.30 மணிக்கு வழக்கம்போல் நான் பால் கறந்து எடுத்துக்கொண்டு சொசைட்டிக்கு சென்றேன். பால் ஊற்றி விட்டு திரும்பி வந்துகொண்டிருக்கும்போது காமாட்சிபாறை அருகே பொதுமக்கள் சிலர் கூடியிருந்தார்கள் நானும் அங்கு சென்று பார்த்தேன். அந்த இடத்தில் ஒரு நபர் இறந்துகிடந்தார். அவருக்கு மூக்கு, வாய் பகுதிகளில் ரத்தம் வந்திருந்தது. அவருக்கு உள்ளாடை எதுவும் இருக்கவில்லை

வேட்டி கலைந்திருந்தது. வேட்டியிலும் ரத்தக்கறை இருந்தது. இது குறித்து நான் மற்றவர்களுக்கு போன் செய்தேன். மேற்படி பகுதியானது விவசாயம் இல்லாத காடாக உள்ள பகுதி ஆள்நடமாட்டம் இருக்கவில்லை. அந்த இடத்தில் பொதுவாக மது அருந்துவார்கள். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி இடமானது தங்கராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்ட பொட்டல் காடு என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு அருகே உள்ள இடங்களும் விவசாயம் செய்யாமல் பொட்டல் காடாக இருக்கும் பகுதி என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கும் புளியம்பட்டி காவல்நிலையத்திற்கும் 1/2 கி.மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம் வேறு நபருக்கு தான் தகவல் சொன்னேன். உடனே போலீசார் அந்த இடத்திற்கு வந்தார்களா என்றால் ஆமாம். மேற்படி இடத்தில் ரத்தக்கறை படிந்த வேட்டி இருந்ததா என்றால் ஆமாம். போலீசார் அதை கைப்பற்றினார்களா என்றால் அதே வேட்டியால் பிரேதத்தை மூடினார்கள். தங்கராஜ் சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் சிறிது காலதாமதமாக வந்தார்.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 44/2024 |
| P.W. | : 4 |
| Name | : திரு. ஈஸ்வரன் |
| Father Name | : திரு. ராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் வெங்கையநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து மேசன் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் 1வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 2வதாக உள்ள கையெழுத்து கார்த்திக் என்பவருடையது. 15-11-2020 அன்று காக்காச்சிபாறை குட்டை அருகே ஒரு நபர் இறந்துகிடந்தார். அந்த இடத்திற்கு பொதுமக்களுடன் நானும் சென்றேன். அப்போது போலீசார் அந்த இடத்தை படம் வரைந்தார்கள். அதற்காக நானும், கார்த்திக்கும் கையெழுத்துசெய்தோம். **பார்வை மகசர் அ.சா.ஆ.2.** காவல் ஆய்வாளர் என்னை

விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே பொதுமக்கள் கூட்டம் அங்கிருந்தது என்றால் ஆமாம். நான் காலை 8 மணிக்கு அங்கு சென்றேன். போலீசார் அங்கிருந்தார்கள். மேற்படி இடமானது விவசாயம் செய்யப்படாத பொட்டல் காடு என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு வடபுறமாக கிழமேலாக செல்லும் இருசக்கர வாகனம் செல்லும் அளவில் பாதை உள்ளது என்றால் சரிதான். பிரேதத்திற்கு அருகாமையில் தடயங்கள் ஏதும் இருக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் எழுதியுள்ள முழு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நான் காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகசரில் கையெழுத்துசெய்துவிட்டு, சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசரில் கையெழுத்துசெய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 5 |
| Name | : | திரு. மோகன்ராஜ் |
| Father Name | : | திரு. பாலசுப்பிரமணியம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் புளியம்பட்டி முத்துநகரில் குடியிருந்து, பெட்டி கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சம்பவ சமயத்தில் நான் கண்ணப்பர் மகால் அருகேயும், பவானிசாகர் ரோடு அருகேயும் பெட்டி கடை வைத்து நடத்தி வந்தேன். 14-11-2020 அன்று ஒரு கொலை நடந்ததாக எனக்கு தகவல் சொன்னார்கள். வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்ட்டதன்பேரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாணையில் 14-11-2020 அன்று இரவு நானும், கடையில் வேலை செய்து வரும் நாகராஜ் என்பவரும் கடையில் இருந்தபோது பச்சாமல்லூரை சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் மது அருந்திவிட்டு போதையில் தள்ளாடி வந்ததாகவும், என் கடைக்கு அருகே ஜெயலானி என்கிற பாபு தள்ளுவண்டியில் வறுவல் மீன் வைத்து வியாபாரம் செய்து வந்ததாகவும், அன்று இரவு பிரகாஷ் பக்கத்து தள்ளுவண்டியில் பன்றி கறி வியாபாரம் செய்து வந்ததாகவும், அவரும் அன்றைய தினம் போதையில்இருந்ததாகவும், மேற்படி சுப்பிரமணி என்பவர் பாபு மீன் கடையில் வறுவல் மீன் வாங்கி காசு கொடுப்பதில் விலை அதிகமாக உள்ளது என்று சத்தம் போட்டு என்னை ஏமாத்துறீங்க என்று கேட்டதால் வாய்தகராறு நடந்தது அதில் ஜெயலானி என்கிற பாபு சுப்பிரமணியத்தை புளியம்பட்டி முத்துநகர் காக்காச்சிபாறை தங்கராஜ் காட்டிற்கு அழைத்துசென்று அவருக்கு பின்னாடி மேற்படி பிரகாஷும் சென்றதாகவும், சிறிது நேரம் கழித்து ஜெயலானி மற்றும் பிரகாஷ் மட்டும் திரும்பி வந்ததாகவும், இவர்களுடன் சென்ற சுப்பிரமணி வரவில்லை என்றும், மறுநாள் சுப்பிரமணியம் இறந்துகிடப்பதாக தகவல் கிடைத்து நானும், நாகராஜும் அங்கு சென்று இறந்துகிடந்த சுப்பிரமணியை பார்த்துவிட்டு கடைக்கு வந்ததாகவும், மறுநாள் போலீசார் சம்பவம் குறித்து விசாரித்த சமயம் உண்மையை சொன்னால் எங்களையும் ஏதாவது செய்துவிடுவார்கள் என்று பயந்து உண்மையை மறைத்ததாகவும் பின்னிட்டு சம்பவம் குறித்து ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது வாக்குமூலம்

கொடுத்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 6 |
| Name | : | திரு. சரவணக்குமார் |
| Father Name | : | திரு. முருகேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் புளியம்பட்டி பனையம்பள்ளி ரெட்டைசாலை என்ற பகுதியில் குடியிருந்து ஓட்டுநராக இருந்து வருகிறேன். 14-11-2020 அன்று மதியம் 12 மணி அளவில் என் சின்னமாமாவை பார்ப்பதற்காக என் பெரியமாமா சுப்பிரமணி கோவைக்கு சென்றார். மாலை 7.45 மணி அளவில் எனக்கு போன் செய்து தான் புளியம்பட்டியில் இருப்பதாகவும், வந்து அழைத்துசெல்லுமாறும் சொன்னார். நான் சத்தியில் இருப்பதாகவும், வருவதற்கு நேரம் ஆகும் என்று சொல்லி நீங்களே

வீட்டிற்கு போய்விடுங்கள் என்று சொன்னேன். பின்னிட்டு அவர் எனக்கு போன் செய்யவில்லை. மறுநாள் புளியம்பட்டி முத்துநகர் காக்காச்சிபாறை அருகே அவர் இறந்துகிடந்ததாக தகவல் வந்தது. அதனால் நான் என் குடும்பத்தாருடன் அங்கு சென்று பார்த்தேன். அவரது உடலை எடுத்துக்கொண்டு புளியம்பட்டி காவல்நிலையத்திற்கு எடுத்துசென்றோம். அவரது உடலை போஸ்ட் மார்ட்டம் செய்வதற்காக பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மறுநாள் அவரது உடலை பெற்று அடக்கம் செய்தோம். சொந்தவேலை காரணமாக 07-02-2023 அன்று நானும் எனது நண்பர் கோபாலகிருஷ்ணனும் நம்பியூர் போவதற்காக சென்றோம். அருணாச்சலம் ஹாஸ்பிடல் அருகே ஆய்வாளர் எங்களை நிறுத்தி 2 நபர்களை காண்பித்து என் மாமாவின் கொலை வழக்கில் மேற்படியார்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக சொன்னார். எங்களையும் சாட்சிகளாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். நாங்களும் ஒத்துக்கொண்டோம். அப்போது அந்த நபர்கள் மது அருந்துவதில் தகராறு ஏற்பட்டு கொலை செய்ததாக ஒத்துக்கொண்டார்கள். மேற்படி நபர்களை காவல்நிலையத்திற்கு அழைத்துசென்றார்கள். பின்னிட்டு கொலை நடந்த இடத்திற்கு அழைத்துசென்றார்கள். சம்பவ இடத்தில் இருந்து அவர் அணிந்திருந்த வேட்டி, பட்டாபட்டி டிரௌசர், 3 அயிட்டங்களை எடுத்துக்கொடுப்பதாக சொல்லி எடுத்துக்கொடுத்தார்கள். அப்போது நாங்கள் சாட்சிகளாக இருந்து கையெழுத்து போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கோபாலகிருஷ்ணனும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3. கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி**

**கையெழுத்து என்னுடையது. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4. மஞ்சள் கறை பார்டர் கொண்ட பாலியஸ்டர் வேஷ்டி சா.பொ.1. காட்டன் வெள்ளை துண்டு சா.பொ.2. மஞ்சள் கலர் வெளிர்ந்து காணப்பட்ட துணி கட்டைப்பை சா.பொ.3. போலீசார் என்னை விசாரித்தனர்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இறந்துபோன சுப்பிரமணியத்தின் மருமகன் என்றால் சரிதான். 07-02-2023 க்கு முன்பாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றாரா என்றால் இல்லை. எதிரிகள் எங்கிருந்து வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் எதிரிகளை இவர்கள் தான் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்று அழைத்துசென்றார் நாங்களும் உடன்சென்றோம் என்றால் சரிதான். அங்கு தயாரித்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னென்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்றால் 3 பொருட்களை கைப்பற்றினார்கள் அது என்னென்ன என்று எனக்கு நினைவில்லைஎன்றால் சரிதான். காவல்நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் காலையில் முக்கால்மணிநேரம் இருந்தோம். கையெழுத்து போடும்போது நேரம் என்னவென்றால் காலை 7.45 இருக்கும். கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ள நேரம் என்னவென்றால் 9.45. சாட்சி சரியாக நினைவில்லை என்று கூறுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் நேரம் 8.45 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் சுமாராகத் தான்சொன்னேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் மதுபோதையில் கொலைசெய்துவிட்டதாக சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு எதிரிகளை அழைத்துசென்று என் முன்பாகவும், கோபாலகிருஷ்ணன் முன்பாகவும் சான்றுபொருட்களை கைப்பற்றியதாக கூறுவது பொய் என்றால்சரியல்ல. சுப்பிரமணி இறந்த பின்னிட்டு 2.1/4 வருடம் கழித்துதான் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்துசெய்ததாக கூறும் ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இறந்துபோன சுப்பிரமணியத்தின் மருமகன் என்பதால் இந்த வழக்கில் என்னை பொய்யாக ஒரு சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள தேதி, நேரத்தில் நானும், கோபாலகிருஷ்ணனும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், சான்று பொருட்களை எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 7 |
| Name | : | திரு. சிலம்பரசன் |
| Father Name | : | திரு. செல்வராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் பனையம்பள்ளி இரட்டை சாலையில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். 15-11-2020 அன்று பக்கத்து தோட்டத்துக்காரரான சுப்பிரமணி அடிபட்டு இறந்துகிடந்தார். அந்த இடத்திற்கு ஊர் பொதுமக்களுடன் சென்று பார்த்தேன். அப்போது இறந்துபோன சுப்பிரமணியத்தின் உடலில் உள்ளாடைகள் எதுவும் இருக்கவில்லை. இது குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 8 |
| Name | : | திரு. அய்யாவு |
| Father Name | : | திரு. மாரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் கோபி, காசிபாளையத்தில் குடியிருந்து, டாஸ்மாக்-ல் விற்பனையாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நான் சாதாரணமாக என் வேலை முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டு மறுநாள் கடைக்கு வந்த சமயம் ஒரு நபர் கடையிலிருந்து ½ கி.மீ தூரத்தில் ஒரு நபர் இறந்துகிடந்ததாக சொன்னார்கள். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தனர். வேறு சங்கதிகள் தெரியாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**